# Chapter – 9 - Speech for 08-January-2022

இந்த அத்தியாயத்தை கர்மயோகி சத் புருஷன் என்று பரம்பொருளிலும் - அது புரிந்து அதை வாழ்வில் கொண்டு வர முடிந்தால் அத்தகைய வாழ்வை தூய வாழ்வு என்று சுபாவங்களை விளக்கும் போது கூறுகிறார். சமர்ப்பணன் சொல்லும் தூய இருப்பு என்னும் வார்த்தை இன்னும் சற்று புரிதலை அதிகப்படுத்துகிறது என்று நினைக்கிறேன். அந்த தலைப்புகளை பற்றிய புரிதலோடு முதல் ஐந்து theme -களான

அகந்தை விலகினால் அனந்த இருப்பின் எல்லையற்ற சக்தியை காணலாம்

மனிதனும் எல்லையற்ற இயக்கமும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை

எல்லாவற்றிலும் பிரம்மம் சமமாகவே உள்ளது

தரமும் அளவும் வேறுபட்டாலும், ஆத்மா சீரானதே

இருப்பும் சக்தியும் முடிவில்லாதது.

என்னும் முதல் ஐந்து theme-களை இந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறேன்.

இதற்கான அடிப்படை விளக்கமாக - சிறிது, பெரியது, பகுதி, தன்மை, தரம், அளவு, என்றெல்லாம் எதிலும் கிடையாது, அப்படியெல்லாம் நாம் யோசிப்பது தப்பு கணக்கு. false account என்று பகவான் சொல்வதைப் பற்றியும் எறும்பு புற்றும், சூரிய மண்டலமும் ஒன்றே, மௌனமும், சத்தமும் ஒன்றே. பலசாலிக்கும், பலவீனனுக்கும் உள்ள சக்தி ஒன்றே - என்பது பற்றியும் சென்ற கூடலில் லதா மேடம் விளக்கினார்கள்.

அவற்றை தத்துவமாக - பகவான் சொல்லி இருக்கிறார் என்பதற்காகவே – தத்துவமாக - ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் அதன் அடுத்த கட்டம் என்ன? - எப்படி நம் வாழ்வில் பொருத்திப் பார்க்கலாம் ?, எனும் போது குழப்பம் ஆரம்பிக்கிறது. காரணம் இது வரை வந்த அத்தியாயங்களில் சிந்தனைக்கு, மனதிற்கு ஒரு இடம் இருந்தது. அதன் மூலம் செயல்படுவது எளிதாக இருந்தது. ஞானத்தைத் தேடும் மனிதன், முதலில் பெரும் கருவி சிந்தனை. அதன் மூலம் நம் மனதின் பகுத்தறிவு தர்க்க நியாயம் - reason and logic -எந்த அளவிற்கு உயர்ந்த உண்மையின் பக்கம் உள்ளதோ, அந்த அளவிற்கு ஞானம் தம்மை வெளிப்படுத்தும். ஆத்மா, கர்மம், மனம், வாழ்வு, ஜடம், பிராணன், மோட்சம்,

சிருஷ்டி, பரிணாமம், போன்ற வார்த்தைகளை இத்தகைய தர்க்கம் பகுத்தறிவு மூலமே பகவானும் கர்மயோகியும் விளக்குகிறார்கள் என்பதால்- அந்த வழியில் என் சிந்தனை இதுவரை பலனளித்தது. ஆனால் இப்போது இந்த அத்தியாயம் முதல் - அரவிந்தம் மௌனத்தின் சக்தி, எண்ணத்தில் எழுச்சி அல்ல என்கிறார். அங்கு எனக்கு தடை வருகிறது. காரணம் மேலே சொன்ன பொதுத்தன்மை எதையும் நான் நடைமுறையில் பார்க்கவில்லை. பலசாலியும், பலவீனனும் நிச்சயம் ஒன்றாகத் தெரியவில்லை. சிறிய காரியத்திற்கு சிறிய எனர்ஜியும் பெரிய காரியத்திற்கு பெரிய எனர்ஜியுமே தேவைப்படுகிறது. கர்மயோகியின் மறைவுக்குப் பிறகு சிறிய விஷயத்திற்கு கூட பெரிய எனர்ஜி தேவைப்படுகிறது என்னும் அளவில் வேண்டுமானால் அதை ஏற்றுக்கொள்வேன். அது போன்றதே தரமும் அளவும் உருவமும்-quality, quantity and forms. எல்லாவற்றிலும் அவை இருப்பதாகவே தெரிகிறது.

பகவான் அன்னையின் பெரிய படங்கள் தரும் அமைதியை பாக்கெட்டில் வைத்திருப்பது தரவில்லை. பகவான் அன்னையின் இளவயது படங்கள் எனக்கு பக்தியை தருவதில்லை. மேக்கப் போட்ட அன்னையைபி பார்த்தால் அன்னையின் மேக்கப்பை பார் என்றோ, அன்னையின் குழந்தைப் பருவ படங்களைப் பார்த்தால் எவ்வளவு naughty -ஆக இருக்கிறது பார் என்றோ, சொல்லத் தோன்றுகிறது. வயதான, அமர்ந்துள்ள அன்னை பகவானை பார்த்தாலே பக்தி வருகிறது. அன்னை முழுதும் தன்னை தருவார் என்றால் அன்னையின் மறு உருவம் அன்னையின் பகுதியே என்று சொல்லும் அளவிற்கு கர்மயோகிக்கு தன்னை அள்ளித் தந்தவர் எனக்கு கிள்ளி தந்தாரா என்று தெரியவில்லை.

பத்து ரூபாய் பேனாக்களே நன்றாக எழுதினாலும் ஆயிரம் ரூபாய் schaeffler பேனாக்கள் தரும் திருப்தியை அது தருவதில்லை. பெட்டி நிறைய பணமும், ஒரு தங்க கட்டியும் ஒன்று என்றாலும், பெட்டி நிறைய பணம் இருக்கும் போது இருக்கும் தன்னம்பிக்கை, நிம்மதி, பெட்டி காலியாக இருந்து, தங்க நகைகள் இருந்தாலும் வருவதில்லை. அதே போல எல்லா இடங்களிலும் அறிவுக்கும், உணர்வுக்கும், அப்பாற்பட்ட விஷயங்களை நம்ப முடியாமல், ஏற்றுக் கொள்ள முடியாமலேயே இருக்கிறேன். அல்லது அப்படி எல்லாம் கிடையாது என்று கூட நினைக்கிறேன். காரணம் இவை என் சிந்தனையின் எல்லையில் இருக்கிறது. இதை தாண்ட வேண்டும் என்றால் பிரம்மம், பரம்பொருள், அன்னை என்று நாம் சொல்லும் ஒன்றுடன் ஒன்ற வேண்டும் அல்லது உணர வேண்டும். It can be known either by identity or by intuition, not by thought என்கிறார்.

ஆனால் உயர் சித்தம் எது என்று தெரிந்தாலும், அதையும் சுயநல நோக்கிலேயே சிந்தித்து, மோட்சம் என்றாலும், அதுவும் சுயநலமே, அப்படி உயர்ந்த சுயநலத்திற்காகவே சிந்தித்து, ஒரு உயற் சித்ததை பெற நினைக்கும் போது, அதற்கான ஞானத்தை பெற நினைக்கும் போது, அதையும் அகந்தையே செய்கிற நிலை என்பதால் நம்மால் ஒன்ற முடியவில்லை. நாமே பிரம்மம் என்பதையோ அதன் அசைவே சத்புருஷனாக இருக்கிறது என்பதையோ, பிரிவினை மூலமே எதையும் அறியும், ஒரு உயர்ந்ததை தாழ்ந்ததுடன் ஒப்பிட்டுப் புரிந்து கொள்ளும் திரணிலிருந்து நம்மால் வெளியே வர முடியவில்லை. அதை மீறி சென்றால் தான் நம்மால் உயர்நிலைகளுடன் ஒன்ற முடியும். அது தரும் முழுமையான ஆற்றலை, பூரண ஞானத்தைப் பெற முடியும். சமர்ப்பணத்தால் அதை செய்ய முடியும் என்று கர்மயோகி சொல்வதற்கு காரணம், அது முழுமையாக நம் அகந்தையை விட்டு வெளியே வரும் இடம் என்பதால். ஆனால், அதையும் நாம் சூழ்நிலையின் நிர்பந்தத்தால் தான் ஏற்றுக் கொள்கிறோம். ஒரு பலனுக்காகவே ஏற்றுக் கொள்கிறோம். அதனால் தான் சமர்ப்பணம் கூட முழுமையாக நம்மிடம் எதையும் வெளிப்படுத்த முடிவதில்லை. அதனால் தான் எதிலும் பகுதி, தரம் , அளவு, காலம் என்று அனைத்திலும் ஒரு பிரிவினை தெரிகிறது. அப்படி இல்லாமல் அதனுடன் ஒன்ற வேண்டும், அது தரும் ஞானத்தை உள்ளுணர்வாக, உள்ளொளியாக, ஆக்க சக்தியாக பெற வேண்டுமென்றால், அது ஏன் இருக்கிறது, அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு, அதன் ஆற்றல் என்ன செய்கிறது, அது தன்னை தருவதாக நாம் உணர்வதற்கு காரணம் - நாமே அது தான் என்பது, நமக்கு அவன் முக்கியம் என்பது போல நாமும் அவனுக்கு முக்கியம் என்பது போன்றவை புரிய வேண்டும். அப்போதுதான் சிறு வேலைக்கும் பிரம்மம் தன்னை முழுமையாக தருகிறது. அப்போது ன் நாம் போடுவதாக சொல்லப்படும் தப்பு கணக்குகள் சரியான கணக்காகும். அப்போது தான் பிரம்மமே நாம் என்பது புரியாமல், அகந்தையே நாம் என்று இருக்கிறோம் என்பது புரியும். அதற்கான standards-ஐ ஏற்படுத்திக் கொண்டு அளவு, தரம், காலம் போன்றவற்றை அதன் மூலம் நிர்ணயித்து, நம்மை வரையறைக்குள் வைத்திருக்கிறோம் என்பது புரியும்.

இந்த பேருண்மை விளங்கினால், அகந்தை பிரம்மத்திற்கு பணிந்ததாகப் பொருள். அப்போது நாம் வேறு பிரம்மம் வேறு. நாம் பிரம்மத்தின் பகுதி என்பது கூட இல்லாமல், நாமே பிரம்மம், பிரம்மமே நாம் என்பதை உணர முடியும், ஒன்ற முடியும். அதில் லயிக்க முடியும் என்கிறார்.

இவையெல்லாம் தத்துவம். என்னால் முடிந்த அளவிற்கு புரிந்து கொள்ள முயன்றேன். சிந்திக்க நன்றாக இருக்கிறது. பிறரிடம் பேச, இது போன்ற

கூடல்களில் பேச, ஏதோ நான் ஆன்மிக ஞானம் பெற்றதாக காட்டிக் கொள்ள முடிகிறது. ஆனால் உண்மையில் உணர்கிறேனா என்றால் இல்லை என்பதே என் திடமான பதில். காரணம், ஒன்றுடன் ஒன்ற வேண்டுமானால் முழுமையான அனுபவம்- integral experience, ஆர்வம்- aspiration , intensity-தீவிரம், மூன்றும் குறைந்த பட்சம் இருக்க வேண்டும். உதாரணமாக நமக்கு பிடித்த விஷயங்களை செய்யும்போது அல்லது சிறு வயதில் நமக்கு பிடித்த விளையாட்டை விளையாடிய போது நாம் அடைந்த ஆனந்தம் - நம் பசி, நேரம், காலம், வெயில், வலி, சோர்வு, சக்தி ஆகிய அனைத்தையும் கடந்தது. சூழல் தன்னை முழுமையாக தந்து, நாமும் அதை முழுமையாகப் பெற்று ஆனந்தத்தை அடைந்த நிலை அது. அது போன்று நமக்கு பிரம்மம் என்பது அன்னை என்று ஒருமுகப்படுத்தினால், அதற்கான தீவிரம், ஆர்வம், முழுமையான அனுபவம். ஆகியவற்றுக்கான திறமை, அழைப்பு இருந்தால், அவரை முழுமையாக உணர, ஒன்ற முடியும். இதற்கு உதாரணமாக கர்மயோகியை பொருத்திப் பார்த்தால் இது புரியும். அவர் அன்னையைப் பெற்ற முறையை , உணர்ந்த முறையை நம்மால் கற்பனை செய்ய முடிந்தால் இது புரியும்.

நாம் என்ன தான் பகுத்தறிவு மூலம், தர்க்கம் மூலம், உயர்ந்ததை பார்க்க நினைத்தாலும், அது காலத்திலும், சூழலிலும் செயல்படுவதால் அதற்கான ஞானத்தைப் பெற்றாலும், அதனுடன் ஒன்ற முடியவில்லை. ஆனால் விளையாட்டில், நாவல், சினிமா, சீரியல், புதிய படைப்பு, புதிய பரிமாணம் ,போன்ற நேரங்களில் நாம் அவற்றை அவற்றுக்காகவே செய்கிறோம். அதில் இருந்து பிரித்து நாம் நினைக்கவில்லை. அதனால் ஒன்றுகிறோம். அது eternity -அதாவது காலம், இடம் இல்லாத அல்லது கடந்த ஒரு நிலையை அளிக்கிறது. விளையாட்டில், நாவலில், சினிமாவில், நேரம் போவது தெரியவில்லை. உடல் வலி, பசி தெரிவதில்லை. சீரியலில் ஒன்றி அழுகிறோம், சிரிக்கிறோம். வேலையில் ஒன்றும் போது Innovation , creativity வருகிறது. நாம் மனதை, எண்ணத்தை, அபிப்பிராயத்தை, கடந்த இடங்கள் இவை, சிந்தனைகளைத் தாண்டிய இடங்கள் இவை என்பதை கவனித்து பார்த்தால் புரியும். இது வாழ்வில், ஆன்மீகத்தில், எல்லா இடங்களிலும் இருக்கிறது. நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதன் பின் உள்ள தத்துவத்தை, சட்டங்களை பார்ப்பதில்லை.

இருள் என்பது அடர்த்தியான ஒளி என்பதை ஏற்றுக் கொள்கிறோம். வெள்ளை நிறம் அனைத்து நிறங்களின் சங்கமம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். மௌனம் மிகப் பெரிய சப்தத்தை உள்ளடக்கியது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். அமைதிக்குப் பின்னால் சக்தி இருக்கிறது என்று போன்ற பலவற்றை அறிந்து இருக்கிறோம். அவற்றை விளக்க முடியாது. அவை

சொற்களால் விளக்க முடியாத ஐக்கியம். அது போல சத் புருஷன் என்னும் தூய இருப்பு அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சுயமான ஒரு நிலை. பிரம்மம் சிருஷ்டியை ஏற்கும் முதல் நிலை. நம்மால் புரிந்துக் கொள்ள முடியாத அசையாத பிரம்மத்தில் ஏற்பட்ட சிறு சலனம் அது. ஒரு உதாரணம் மூலம் புரிந்துக் கொள்ள நினைக்கிறன்.

நான் மாத சம்பளத்திற்கு வேலை பார்த்த போது owner -க்கு அடிமையாக, ஜடமாக அல்லது அவருடன் ஒன்றி அவருக்காக வேலை செய்து கொண்டிருந்தேன் என்று வைத்துக் கொள்வோம். ஒரு நாள் நாம் ஏன் ஒரு புது வகையான ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடாது என்று நினைத்த போது ஏற்பட்ட நிலை சலனம். அப்போது முதன் முறையாக என் திறமை, என் அறிவு, என்னால் சாதிக்க முடிந்தவை, அதன் மூலம் நான் பெறப் போகும் ஆனந்தம் என்று பலவற்றை நினைக்கிறேன். என் அகந்தை வெளிப்பட்ட முதல் தருணம் அது. அதில் அது வரை பெற்ற அனைத்து ஞானமும், அஞ்ஞானமும் catering பற்றி, amusement park பற்றி, hotel, bar , plastic dyes and pigment பற்றி, construction chemicals பற்றி, ரௌடி, போலீஸ், அரசியல்வாதி பற்றி, நல்ல வழி குறுக்கு வழியைப் பற்றி என்று எவ்வளவோ விஷயங்களை உள்ளடக்கியது. அறிவும் அறியாமையும் கலந்தது. அவற்றை பற்றிய விழிப்புணர்வையும் விழிப்பில்லாத நிலையையும் உள்ளடக்கியது. ஆனால் அவற்றுள் குறிப்பான சிலவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு - உதாரணமாக construction chemicals பற்றி மட்டும் எடுத்துக் கொண்டு அந்த ஆனந்தத்தை எந்தெந்த பண்புகள் மூலம் அடைய வேண்டும் என்று மேலும் என்னை குறுக்கிக் கொண்டு சித்துக்குள் வருகிறேன். அதாவது செயல்படும் சக்திக்குள் வருகிறேன். அது அடுத்த அத்தியாயம். இங்கு அதன் பொருள் என்னவென்றால் - பிரம்மம் சிருஷ்டியை ஆரம்பிக்க எடுத்த நிலைக்கு முன் நிலை சத் என்னும் நிலை அதுவே சத் புருஷன் அதுவே தூய இருப்பு.

இதை நடைமுறையில் மனம் மூலம் தன் மூலத்தை அறிவதே சூட்சுமம். அறிந்த பின், அதற்கு சரணடைந்தால் வாழ்வு தெய்வீக வாழ்வாக மாறும். இந்த வரிகளே லைப் டிவைனின் ஒரு வரி சுருக்கம் என்கிறார் கர்மயோகி. இது தெரிந்த பின்பும், அதை பயன்படுத்த மறுப்பது "மனிதனின் உயர்ந்த பண்பு" என்று quotation-னுக்குள் சொல்கிறார். பகுத்தறிவு, தர்க்கம் மூலம் இதை புரிந்துக் கொள்ள முடியாது என்றவர், அந்த நிலையையும் மனம் மூலமே பெற வேண்டுமென்றால் - அதற்கு அடிப்படை தேவையாக அவர் குறிப்பிடுவது - விழிப்பான கூர்ந்த பார்வை, எதிர்பார்ப்பு, அபிப்ராயங்கள் இல்லாத மனம், அனுபவங்களை முழுமையாக ஆராயும் திறன், உயர்ந்ததற்க்கு உரியதாக வேண்டும் என்னும் ஆழ்ந்த அக்கறை. குறைந்த பட்சம், இந்த நான்கும்

இருந்தால் மனம் எழுப்பும் கேள்விகளுக்கு நம் நம்பிக்கை பதிலளிக்கும். அது ஆன்மாவின் ஞானமாகும் . இந்தக் கண்ணோட்டத்தில் quality ,quantity, forms என்று முன் குறிப்பிட்டவை நாம் வரையறுத்த தரம்,அளவு, உருவம் இருக்காது. நாம் நினைக்கும் முடிவு result உம் இருக்காது. ஒரு உதாரணம் மூலம் விளக்க முயல்கிறேன்.

சில மாதங்களுக்கு முன் வேலைக்கு சேர்ந்த ஒருவர் barrel-களை அடுக்க வேண்டிய முறைப்படி அடுக்கவில்லை. அதனால் சில barrel -கள் நசுங்கி இருந்தது. அதை அடுக்கி 10 நாட்கள் இருக்கும். இந்த பத்து நாட்களில் இதை கவனிக்க வேண்டிய மேனேஜர் பத்து முறையாவது சென்று இருப்பார். இருந்தாலும் சரி செய்ய நினைக்கவில்லை. மேலும் சில barrel -கள் வெயிட் தாங்காமல் நசுங்கியது. நான் பார்த்தவுடன் முதலில் செய்த நபரை பார்த்து சப்தம் போட்டேன். கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தினேன். ஆனால் உண்மையில் மேனேஜரும் குற்றவாளியே. அவரை நான் கொஞ்சம் பார்த்து இருக்கக் கூடாதா என்று கேட்டு விட்டு, விட்டு விட்டேன். இது ஒரு சாதாரண நிகழ்வு. வியாபாரத்தில் சகஜமான நிகழ்வு. ஆனால் இதன் பின்னால் பார்த்தால், எனக்கு முதலில் வேலை செய்தவரை பிடிக்கவில்லை. காரணம் இந்த தீபாவளி போனஸ் தரும் போது, வழக்கமாக ஒரு மாதம் சம்பளம் கொடுக்கும் நான் 15 நாள் சம்பளம் தான் போனசாக கொடுத்தேன். காரணம் கடந்த இரண்டு வருட lockdown பாதிப்பு. புதிதாக சேர்ந்த நபர் இவ்வளவு தானா என்று கேட்டார். இந்த மேனேஜர் ஒன்றும் சொல்லாமல் வாங்கிக் கொண்டார். அந்தக் கோபம், ஆற்றாமை, சரியான நேரத்தில் வெளிப்பட்டது. நிகழ்வு ஒன்று தான் - ஆனால் ஆளுக்கு தகுந்தாற் போல், செயலை, உணர்வை, சக்தியை அது வெளிப்படுத்துகிறது. ஒருவருக்கு தண்டனை என்பது ஒருவருக்கு மன்னிப்பு என்றானது. இரண்டும் என் உள்ளே இருந்தே வந்தது. நான் செய்திருக்க வேண்டியது stock அதிகமாக இருக்கும் போது செய்ய வேண்டிய SOP-ஐ சரியாக சொல்லியிருக்க வேண்டும். அல்லது அதற்கு மேனேஜரின் Job description-ஐ சரியாக செய்திருக்க வேண்டும். இப்போது இந்த நிகழ்வை quality , quantity என்னும் அளவில் பார்த்தால், அது நாம் செய்யும் response - உடல் உணர்வில் மனதில் நாம் தரும் response-ஐ பொறுத்தது என்பது புரியும். அதற்கேற்ப அந்த செயல் வடிவம் பெறுகிறது. சூழலை உருவாக்குகிறது. துன்பத்தையோ, ஆனந்தத்தையோ தருகிறது. இந்த விஷயத்தில் அந்த நபர் இந்த மாதம் வேலையை விட்டு சென்று விட்டார். என் அகந்தை அவர் அகந்தையை தொட்டது. அதிலிருந்து பெற்ற ஞானம் என்னவென்றால் நாம் நமக்குப் பிடிக்காதவற்றை பிடிக்காதவர் செய்தால் எதிர்க்கிறோம். பிடித்தவர் பிடிக்காததை செய்தாலும் பொறுத்துக் கொள்கிறோம், ஏற்றுக்

கொள்கிறோம். அதன் சாரமான அனைத்தையும் உள்ளடக்கிய ஞானம் என்னவென்றால் இனி எனக்கு எரிச்சல், கோபம், இயலாமை, சோகம், depression ஏற்படும் இடங்களில் எதை யாரை ஏற்க மறுக்கிறேன், எதை யாரை எதற்கு ஏற்றுக்கொள்கிறேன் என்று நினைத்தால், நான் பெறவேண்டிய உயர் ஞானம் எனக்கு கிடைக்கும். வாழ்வு தருவதை முழு மனதுடன் , முழு பார்வையுடன் ஏற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பாக நாம் சமர்ப்பணம் செய்து அல்லது அன்னையிடம் சொல்லி விட்டு செல்லும் இடங்கள் கர்மயோகி சொல்லும் ஞானத்திற்கான கூர்ந்த பார்வை தேவைப்படும் இடங்கள். உதாரணமாக, நான் பிரபலமான ஒரு கடையில் ஸ்டேஷனரி வாங்குவது வழக்கம். அது எல்லா பொருட்களும் - துணி, நகை, முதல் மளிகை வரை கிடைக்கும் இடம். சில நேரங்களில் உள்ளே போனவுடன் வாங்கிக்கொண்டு வெளியே வந்தால் போதும் என்று தோன்றும். சில நேரங்களில் ஒரு பொருளை வாங்கி விட்டு அனைத்து மாடிகளையும் சுற்றிப்பார்க்க அல்லது வேறு பொருட்களை வாங்கத் தோன்றும். இந்த இரண்டு மனநிலை, சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்த்தால் பிடிக்காத நேரத்தில் வாங்கும் பொருட்கள் அனைத்தும் பிரச்சனையோடு இருக்கும். சமீபத்தில் நான் வாங்கிய reputed brand பேனா ஒரு dozen -னும் சரியாக எழுதவில்லை. அதே போல நம் மனம் பிடித்து நடந்தால் பலகாலம் தேடிய பொருள் ஒன்று அன்று கிடைக்கும். சமர்ப்பணம் செய்து செய்யும் வேலைகளில் - நாம் தரும் அறிவு, உணர்வின் முழுமை அன்னை தரும் முழுமையை பெற முடியும்.

நாம் செய்யும் எந்த வேலையையும் இப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் கவனித்தால், திறமை, energy ஆகியவற்றுக்கு ஏற்ற வரையறையை வைத்துக் கொண்டு செய்வது தெரியும். வேலை முடிந்தவுடன் அப்பாடா என்று இருக்கும். அதை நன்றாக செய்ததாக நினைப்போம். அதோடு ஒன்றி பார்த்தால், அது இயலாமையின் வெளிப்பாடு என்பது தெரியும். அதை திருப்தி தந்த வேலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் எந்த அளவிற்கு நம்மை முழுமையாக கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு வேலையும் தன்னை முழுமையாக தந்திருப்பது புரியும். ஆங்கிலத்தில் relief -க்கும் fullfillment க்கும் இருக்கும் வித்தியாசத்தைப் பார்த்தால் - அது நம் வாழ்வில் நடந்த இடங்களை பார்த்தால் இது புரியும் என்கிறார்.

நாம் முழுமையை தர, அல்லது முழுமையை பெற - ஏற்படுத்தும் தடைகள்- எவை -அதை எடுக்க வேண்டியதற்கு நாம் செய்ய வேண்டியவை - எவை என்பதெல்லாம் அப்போது ஞானமாக நம்மிடம் வரும்.

இத்தகைய சிறு விழிப்புணர்வுக்கான கூர்ந்த பார்வை, வாழ்வில் பெரிய initiative -கள் அல்லது தடைகளை கவனிக்கும் ஞானத்தை நமக்குக் கொடுக்கும். அந்த ஞானம் வரும் போது நம் அகந்தை, நம் அறிவு, நம் அறியாமை, நம் சுபாவம், நம் நடத்தை, நம் அபிப்பிராயம், முன்முடிவுகள் என்று அத்தனையும் நம் கண் முன் விரியும். அதுவே நம் தூய இருப்பு. அதை பேருண்மையின் பார்வையில், பிரம்மத்தின் பார்வையில், பார்க்கும் போது நம் வாழ்வை தெய்வீக வாழ்வாக மாற்றும் ஞானம் வரும்.

இப்போது சொன்ன இந்த இரண்டு உதாரணங்களில் இருந்தும் பெறும் பேருண்மை என்னவென்றால், நம் துன்பத்திற்கு காரணம் சூழலோ, செயல்கலோ, நடப்போ, யாரோ, எவரோ, எதுவோ, காரணம் அல்ல. நம் மனப்பான்மை, அது கட்டமைத்த அபிப்பிராயங்கள் மட்டுமே காரணம் என்பது புரியும். அதன் பின்னால் நம் உணர்வு, மனம், அகந்தை அடிபடும் விஷயம் எதுவும் இருக்காது என்பதால் துன்பமும் இருக்காது. இன்பம் மட்டுமே இருக்கும். குறைந்தபட்சம் சமநிலை equality-யாவது வரும். அது அன்னை விரும்பும் பண்பு. படைப்பாற்றல் கொண்ட பண்பு - manifesting aspect . அது போல நம்மிடம் உள்ள பொறாமை, இயலாமை, வெறுப்பு போன்றவற்றை ஆராய்ந்தால் நாம் பெறவேண்டிய - திருவுரு மாறவேண்டிய - இடங்களைப் பற்றிய ஞானத்தை தரும். உதாரணமாக நம்மில் இருக்கும் பொறாமையை ஆராய்ந்தால் அது inspiration ஆக மாறும். இயலாமையை ஆராய்ந்தால் அது திறமை, திறனாக மாறும். அதுபோல நம் வெறுப்பை ஆராய்ந்தால் அது அன்பாக, நல்லெணமாக மாறும். இவை நம்மை முழுமையாக்கும் பண்புகள். இவை அனைத்தும் அன்னை விரும்பும் பண்புகள். இவற்றை பெற்ற பிறகு வாழ்வை கவனித்தால், அது தரும் மறுமொழியை கவனித்தால், அது தன்னை முழுவதுமாக தந்திருப்பதும்,அதற்காகவே காத்திருப்பதும் தெரியும்.

அன்னை கிள்ளிக் கூட தருகிறாரா என்று தெரியவில்லை என்று கூறினேன். யோசித்துப் பார்த்தால் அன்னை தன்னை முழுவதுமாக தரத் தயாராக இருக்கிறார். நாம் தான் பெறத் தயாராக இல்லை என்பது புரியும். ஒவ்வொரு முறை மனம் மாறும் போதும் - அன்னை விரும்பும் மன மாற்றத்தை கொண்டு வரும் போதும் - சூழல், மனிதர்கள், சட்டங்கள் என்று அனைத்தும் மாறுகிறது . அதன் பொருள், அன்னை அருகிலேயே இருந்து இவன் மாறுகிறானா, தன்னை தந்து விடலாமா என்று தருவதற்கு காத்திருப்பது தெரியும். இங்கு நமக்கு ஒரு கேள்வி வரும். ஏன் ஒவ்வொரு முறையும் சிறு விஷயத்தில் கூட அவர் தன்னை முழுவதுமாக தந்தாலென்ன என்னும் கேள்வி குதர்க்கமாக எழும். மின்சாரத்தின் வேகம், அழுத்தம் ஒன்றே. அதை பெறும் கருவிக்கு ஏற்பவே அதை செலுத்த வேண்டும். அதற்கான reducer, adapter வேண்டும்.

இல்லையென்றால் கருவி பழுதாகி விடும். அது போல உயர் சக்திகளை அருளை, அதை பெறும் வலிமை இல்லாத நிலையில், அதை பெறுவதும் , பயன் படுத்துவதும் நமக்கு பாதகமாகவே முடியும்.

உதாரணமாக அன்னையுடன் இருந்தாலும் - அதிமன சக்திகளைப் பற்றி- பகவானின் சக்தி பற்றி - பேசினாலும் சத்ப்ரேம் அவ்வப்போது அன்னையை மரபில் சொல்லப்படும் வழிகளை செய்யச் சொல்வார். மந்திர ஜபங்கள் செய்யுங்கள் என்பார். ஒரு யோகியை அழைத்து வந்து இவரிடம் கேளுங்கள் என்பார். ஒரு முறை ஜாதகம் கூட பார்க்கச் சொன்னார். அதற்கு ஒரு முறை அன்னை நீ ஏன் இப்படி இருக்கிறாய் என்று உன் உள்ளே சென்று பார்த்தேன் .உன் அபிப்ராயங்கள் இறுகி இருக்கின்றன. என்னால் மாற்ற முடியும். ஆனால் அது உனக்கு பாதகமாக முடியும் என்றார்.Your opinions are crystalized. If I remove it, you will disintegrate என்றார். அது போலத் தான் பகவான் - அன்னை உலகத்தை ஒரே நாளில் Supramentalization செய்ய முடியும். ஆனால் உலகத்தால் தாங்க முடியாது என்றார். இதன் மூலம் புரிவது என்னவென்றால், அன்னை தன்னை முழுவதுமாக தரத் தயாராக இருக்கிறார். நம்மால் பெற முடியாது. தாங்க மாட்டோம் என்பதாலேயே, நாம் தடை ஏற்படுத்துவதாலேயே அப்படி இருக்கிறது.

இதன் பெரிய அடையாளம் என்னவென்றால் நமக்கு ஒரு வாய்ப்பு வந்து தவறி இருந்தால், அது மீண்டும் மீண்டும் அது போன்ற அல்லது அதற்கு இணையான வாய்ப்பு வருவதை காணலாம். அது வாழ்வும், அன்னையும் தங்களை முழுவதும் தருவதற்கு காத்திருப்பதன் அடையாளம்.

கர்மயோகிக்கு முழுமையாக அன்னை தன்னை கொடுத்தவர். எனக்கு கொடுப்பாரா என்பது தெரியவில்லை என்றேன்.

சத்ப்ரேமுக்கு செய்தது போல மறைமுகமாக கொடுக்கிறார். பெரிய project - களில் பிரச்சினைகள் வரும்போது நான் நேரடியாக தலையிட முடியாது. அப்படி இருந்தால் அது முதல் பேச்சு வார்த்தையுடன் முடிவுக்கு வரவில்லை என்றால் அதோடு அந்த உறவு முடிந்து விடும். அதற்கு Supervisor ,Manager நிலைகளில் பேசி கடைசியில் ஒன்றும் முடியவில்லை என்றால் தான் என்னிடம் வருவார்கள். இதற்கு escalation என்று பெயர். அப்படி செய்பவர்களை shock obserber கள் என்பார்கள். காரணம் பெரிய கம்பெனிகளின் ஏளன பேச்சுக்களை, கிண்டல்களை தாங்கிக் கொள்வார்கள் அவர்கள்.

அதை போல போட்டோ எடுக்கும் போது வெளிச்சம், கண் கூசாமல் இருக்க , conscious ஆக இல்லாமலிருக்க reflect களை பயன்படுத்தி வெளிச்சத்தை தருவார்கள். அதே போல மரம், concrete முதலியவை காயவில்லை என்றால், நேரடியாக சூடுபடுத்தி காய வைக்க முடியாது. மறைமுகமாகவே latent heat generator கொண்டே காய வைக்க முடியும். இவையெல்லாம் மூலம் பாதிக்காமல் இருக்க, அதன் செயல் தன்மை தரம் பாதிக்காமல் இருக்க, அதன் மூலக்கூறுகள் பாதிக்காமல் இருக்க, செய்யப்படுபவை.

அப்படி ஒரு shock observor ஆக, reflector -ஆக, reducer -ஆக , இருந்திருக்கிறார் கர்மயோகி. அவரை கருவியாக பயன்படுத்தி, என் சுபாவத்தின் தடைகளை தாண்டி , அதனால் ஏற்படும் குறைகளை , பிரச்சினைகளை, முரண்பாடுகளை மட்டுப்படுத்தி அன்னை தன்னை எனக்கு முழுமையாக தர நினைக்கிறார் என்பது புரிகிறது.

அதே போல அன்னை படத்தை பற்றி சொன்னேன். அன்னையை ஒரு தெய்வமாக, அதாவது நாம் அறிந்த தெய்வம் என்னும் கோட்பாடாக பார்க்காமல், பரிணாமத்தை துரிதப்படுத்த வந்த சக்தியாக பார்த்தால் குழந்தை படத்தின் கண்ணில் தெரியும் ஆர்வம், பகவானை படிகளில் சிறு வயதில் பார்த்த ஞானப் பார்வை என்று தெரியும். அந்த உணர்வோடு ஒன்றினால், பகவான் நம் கதவருகில் நிற்கும் அனுபவத்தையும் பெற முடியும்.

நாம் ஏற்படுத்தும் தடைகளை கவனிக்க வேண்டுமென்றால், அதற்கு நாம் வாழ்வை கவனித்தால், நாம் திட்டமிட்ட பாதையில் செல்லவில்லை, கொண்ட கொள்கையில் உறுதியாக இல்லை, நம் goals வெகு தூரமாக இருக்கிறது. திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான ஆட்கள், பிரச்சனைகள் வருகிறது என்பதை கவனித்தால் - நாம் கேட்க வேண்டிய கேள்விகள், சிந்திக்க வேண்டிய முறைகள் ,பகுத்தறிவு, தர்க்கம் போன்றவற்றை சரியாக பயன்படுத்தவில்லை என்பது பொருள். நம் ஐக்கியம், உள்ளுணர்வு போன்றவற்றை பெறத் தேவையான புத்தி, தீட்சண்யம் போன்றவற்றை பெறவில்லை என்பது பொருள். நம் மனம் அகந்தையிலிருந்து பிரிந்து ஆன்மாவை கேள்வி கேட்டால் ,ஆன்மா பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அதன் self existant knowledge வெளிப்படுத்துவதற்காகவே இருப்பது அது. அதை கேள்வி கேட்கும் முன் அதற்கான நம் ஆர்வம், தீவிரம் நாம் பெற வேண்டிய ஞானத்தை முடிவு செய்யும். அதற்கு ஏற்பவே நம் வாழ்வின் தரம், அளவு இருக்கும். அந்த அளவே பெறுவோம்.

இது வரை நான் சொன்னதன் சாரம் என்னவென்றால் நாம் நம்மால் முடிந்த முழுமையை தந்தால் பிரம்மத்தின் முழுமையை உணர முடியும். அது தருவதை முழுவதும் அதனிடமிருந்து நேரடியாக பெற முடியும். இதற்காக ஏற்கனவே சொன்ன உதாரணங்களையே மீண்டும் கூற வேண்டி இருக்கிறது. ஆனால் வெவ்வேறு context என்பதால் பொருந்தும் என்றே நினைக்கிறேன். கர்மயோகி மதர் எஸ்டேட்டில் நடந்ததையே வெவ்வேறு கட்டுரைகளில் சொன்னது போல இதை எடுத்துக் கொள்கிறேன். காரணம் புராண, இதிகாச உதாரணங்களையோ, ஆங்கில நாவல்களின் உதாரணங்களையோ என்னால் தர முடியவில்லை.

மையத்திற்கு வந்து ஓரளவு என் வாழ்வில் சில மாற்றங்களை பார்த்த ஒரு அன்பர், அவற்றை கர்மயோகிக்கு எழுதச் சொன்னார். அப்போது அவர் மேல் எனக்கு பெரிய பக்தி எல்லாம் கிடையாது. காரணம் அதுவரை நான் சுயநலமானவர்களை தவிர வேறு character எதையும் பார்த்ததில்லை. மனித சுபாவம் புத்தகம் என்னை ஆட்கொண்டு இருந்த நேரம் அது. அதில் உள்ள நல்லெண்ணம் ,ஒரு வித்தியாசமான உணர்வை தந்ததால் அவரைப் பற்றியும் ஒரு மரியாதை, admiration and adoration இருந்தது.

என் கையெழுத்து கிறுக்கலாகத் தான் இருக்கும். hotel-லில் order எடுக்கும் போது எழுதுவது Kitchen Supervisor-களுக்கு புரிந்தால் போதும் என்னும் அளவிலேயே இருக்கும். மெடிக்கல் ஷாப்புக்கு புரிந்தால் போதும் என்று எழுதும் டாக்டர் prescription போலத் தான் இருக்கும். எனக்கு அப்போது computer, typing எதுவும் தெரியாது. அதனால் இப்படிப்பட்ட ஒருவருக்கு எழுதும் போது அப்படியா எழுதுவது என்று சுமார் பத்து பக்கம் என்னால் முடிந்த அளவு அழகாக, பின் பக்கம் கோடு போட பேப்பரை வைத்து, லைன் ஏற்ற இறக்கமாக இல்லாமல், எழுத்துக்கள் ஒரே உயரம், ஒரே அளவாக, என்று பார்த்து பார்த்து எழுதினேன். அப்போது வாழ்வின் சட்டங்களைப் பற்றி தெரிந்து இதை செய்யவில்லை. மரியாதைக்குரிய ஒருவருக்கு எழுதுவது அதற்குரிய மரியாதையோடு இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரிந்த உயர்ந்த நிலையில் இருந்து செயல்பட்டேன்.

அதன் பின் கிட்டத்தட்ட பதினோரு வருடம் கழித்து அவரிடம் நேரில் பேசிய போது அன்றே உன்னை கவனிக்க ஆரம்பித்தேன் என்றார்.

அதாவது நான் எனக்குத் தெரிந்த உயர்ந்த நிலையில், உணர்வில், அறிவில், உடலில், அதாவது உயர்ந்த நிலையில் நின்று செயல்படும் போது, நம் உயர்ந்த அறிவு வெளிப்பட்டு, அறியாமை-இருந்தாலும் அது வெளிப்படாமல் இருக்கிறது. அதாவது நம் உயர் சித்தமும்,அதன் பரிமாணங்களும் மட்டுமே வெளிப்பட்டு, நம் தாழ்ந்த சித்தமும் அதன் பரிமாணங்களும் மறைந்து அடங்கிக் கிடக்கிறது. என் முழுமையை தரும் போது, அது முழுமையை உயர் தரம், அளவு, காலத்தை சுருக்குதல், போன்றவற்றுடன் வருகிறது.

இதை கர்மயோகிக்கு மட்டுமே செய்யாமல், ஒவ்வொரு முறையும் யாருக்கு செய்தாலும், யாருக்கு எழுதினாலும், அதே போல செய்தால், நாம் செயலுடன் ஒன்றுகிறோம், நாம் பிரம்மத்துடன் ஒன்றுகிறோம். அங்கு வேறுபாடுகள், அபிப்பிராயங்கள், முன் முடிவுகள் எதுவும் இல்லாததால் சிரியதற்கு ஒரு energy பெரியதற்கு ஒரு energy என்று இருப்பதில்லை. எறும்பு புற்றுக்கும், சூரிய மண்டலத்திற்கும் இறைவன் தரும் effort and perfection ஒன்று என்பது போல, நாமும் தரும் போது நாமே இறைவன் ஆகிறோம். ஒன்றை விட ஒன்று உயர்ந்தது என்று நினைத்துப் பார்த்தே, அதற்கு ஏற்றவாறே எதையும் செய்வதால் நமக்கு ஏற்றத்தாழ்வு, தரம், அளவு, போன்ற எண்ணங்கள் வருகிறது. எல்லாம் ஒன்றே என்ற கருத்தில், செயலில், உணர்வில், மனதில், செம்மை மட்டுமே என் வேலை என்னும் போது, இவை அனைத்தையும் கடக்கிறோம். நான், அவன், அது என்ற பிரிவினைக்கான சிந்தனை இல்லாமல், நானும் எல்லோரும் ஒன்றே என்பது முதல் நிலையிலும், நானே அவன் என்ற முடிவான நிலையிலும் செய்வது தூய இருப்பு. இதை நடைமுறையில் பார்க்க செய்து பார்த்து புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நான்கு வகையான சிந்தனை முறைகளைக் கொண்டு இந்த நிலைக்கு வர முயலலாம்.

1) லட்சியம் , உயர்சித்தம் மட்டுமே நமக்கு முக்கியமாக இருக்க வேண்டும். இவை இரண்டும் இது இல்லை என்றால் எனக்கு வாழ்வு இல்லை, ஆனந்தம் இல்லை, என்னும் அளவிற்கு இருக்க வேண்டும். அந்த அளவிற்கு அதன் முக்கியத்துவம் புரிய வேண்டும் அதன் முழுமை புரிய வேண்டும். It must be infinitely important to us, as we are to it. To do this, we have to know it integrally.

2) அந்த செயலுக்கு வரையறை இல்லாமல் இருக்க வேண்டும். அதன் மூலம் பெறக்கூடிய ஞானம், அனுபவத்துக்கு அளவே இல்லாமல் இருக்க வேண்டும். நம் பகுத்தறிவு, தர்க்கம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். It should be infinite – as reason, logic, experience has a point of end.

3) Justify -நியாயப்படுத்த முடியாவிட்டாலும், இல்லை என்று சொல்ல முடியாததாக இருக்க வேண்டும். It should be defendable. Even when it cannot be justified by mind.

4) நாம் அறிந்த நம் பாகங்கள் அனைத்தையும் ஒன்றிணைப்பதாக இருக்க வேண்டும். It should unite all parts of our being.

இந்த நான்கையும் கொண்டு வர முடிந்த நிலையில், நாம் சித் சக்தியாக செயல்படுத்தக் கூடிய, அதற்கு முன்பு இருக்கக்கூடிய நிலையில் இருப்பதால், அதை தூய இருப்பின் நிலை என்று புரிதலுக்காக எடுத்துக் கொள்ளலாம்.

இதை சில உதாரணங்கள் மூலம் விளக்க முயல்கிறேன்.

நான் ஒன்பதாவது, பத்தாவது படிக்கும் போது வழக்கமான கடைசி பென்ச் adolescent பிரச்சினைகளை, யானை பல் விளக்குகிறதா, படிக்காத மேதை இல்லையா, போன்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, வீட்டுக்கு அடங்காத தறுதலையாக சுற்றியதால், படிக்க வேண்டிய காலத்தில் படிக்காமல் விட்டு விட்டேன். அதாவது செய்ய வேண்டியதை-செய்ய வேண்டிய காலத்தில்-செய்ய வேண்டிய முறைப்படி- செய்யவில்லை. தாய் தந்தை பேச்சை கேட்காமல் பிறர் பேச்சை கேட்டேன். அந்த பிறரே எனக்கு முக்கியமாகப் பட்டனர்.

அதாவது இப்போது அன்னை, கர்மயோகி பேச்சை கேட்காமல், அவர் சொன்னதை புரிந்துக் கொள்ளாமல், அதுவே செய்ய வேண்டியது, அதுவே முறை என்பது தெரிந்தும் செய்யாமல், அவர்களுடன் தொடர்புகொண்டவர்களே முக்கியம் என்பது போல, அவர்கள் அன்னை, கர்மயோகிக்கு எதிராகப் போகிறார்கள் என்று தெரிந்தும், அவர்கள் நம்மை exploit செய்கிறார்கள், தங்கள் சுயநலத்திற்கு, குடும்ப நலத்திற்கு நம்மை உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்று தெரிந்தும், அவற்றை செய்வது போல தாய், தந்தையை விட பிறரே முக்கியமானவர்களாக இருந்தனர்.

அதன் பிறகு திருந்தி, என்னதான் கடுமையான உழைப்பு இருந்தாலும், உணர்வு, அறிவில் முன்னேற்றம் இல்லாததால் பெரிய பலன் எதுவும் இல்லை. படிப்பு இல்லாமல் இனி முன்னேற முடியாது என்று புரிந்தவுடன் அதாவது, வாழ்வின் சட்டம், மற்றும் ஆன்மீக சட்டப்படி saturating previous plane , முந்தய நிலையில் நாம் செய்ய வேண்டியதில் பாக்கி இருந்தால், ஒரு நிலைக்கு மேல் வாழ்வு நகராது என்பதன் அடிப்படையில் படிக்க ஆரம்பித்தேன். 35 வயதுக்கு

மேல் மூன்று degree -களை முடித்தேன். அதை சேர்ந்ததிலிருந்து முடித்த வரை ஏராளமான விஷயங்கள் எனக்கு சாதகமாக - சட்டம் மாறியது முதற் கொண்டு ஏராளமான விஷயங்கள் எனக்கு சாதகமாக நடந்தது. அதன் பிறகு அதே போல ஆங்கிலம் தெரியாமல் இனி வாழ்வில் முன்னேற முடியாது என்னும் போது கர்மயோகி அறிவுரைப்படி தினம் ஒரு வார்த்தை தான் படித்தேன். ஆனால் அது பல மடங்கு பலனைக் கொடுத்தது. சமீபத்தில் சமர்ப்பணன் கூட உங்கள் தமிழை விட ஆங்கிலம் நன்றாக இருக்கிறது என்றார். கர்மயோகியும் அதை சில முறை சொல்லி இருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக நான் ஈடுபட்டு இருக்கும் தொழில் சம்பந்தமாக படிப்பது, அது தொடர்பான விஷயங்களை படிப்பது, என்று தொடர்ச்சியாக அதை நிறுத்தாமல் செய்கிறேன். அப்போது ஒரு அன்பர் - ஒரு உயர் பதவிக்கான, சர்வதேச ஸ்தாபனத்தில் முக்கிய பொறுப்புக்கான வாய்ப்பு வந்து அதை ஏற்றார். கர்மயோகி, இப்போது அனைத்து அன்பருக்கும் அந்த சூழல் இருக்கிறது, உன் ஆர்வத்தை இந்த விஷயத்தில் உயர்த்த முடியுமா பார் என்றார். அவர் சொன்ன ஒன்றை Token Act ஆக எடுத்துச் செய்த சில நாட்களில் ஒரு சர்வதேச association -னில் உறுப்பினராக நான் அங்கீகரிக்கப்பட்டேன்..

நான் விசாரித்த வரையில் உலகிலேயே Electronics அல்லது Mechatronics இல்லாமல் அதில் உறுப்பினராக இருப்பது நான் மட்டுமே என்னும் அளவிற்கு இன்று இருக்கிறது. சமீபத்தில் ஒரு கம்பெனியில் quotation களை பார்த்த போது அதில் இருந்த பெரும்பாலானோர் என்னிடம் வேலை செய்து சென்றவர்கள் அல்லது என் guidance கேட்பவர்கள் என்பது புரிந்தது. போட்டியாளர்களை நானே உருவாக்கி விட்டேன் என்ற எண்ணம் ஒரு பக்கம் இருந்தாலும், என் ஆர்வம், அறிவு பரவியிருக்கிறது என்பது ஒருவகையில் எனக்கு ஆனந்தமே.. இது நானும் எல்லோரும் ஒன்று என்னும் ஒரு நிலை.

இந்த சுருக்கத்தில் கிளை நிகழ்வுகளாக ஏராளமானவற்றை சொல்லலாம். ஆனால் சோர்வளிக்கும் என்பதால் - இந்த உதாரணத்தில் எப்படி நான் சொன்ன சத்புருஷத்துக்கான சட்டங்கள் பொருந்துகிறது என்பதைச் சொல்கிறேன்.

பண வளம் மட்டுமல்ல மனவளமும் சேர்ந்ததே முன்னேற்றம் என்று புரிந்த பிறகு நான் இருக்கும் நிலையை விட்டு தாழ்ந்த சூழல், மனிதர்கள்,மனநிலை விட்டு வெளியே வர வேண்டும் என்றால் உயர் சித்தம் மட்டுமே முக்கியமாக இருக்க வேண்டும். அது இல்லையென்றால் வாழ்வே இல்லை , ஆனந்தம் இல்லை என்பது தீவிர ஞானமாக இருக்க வேண்டும். அந்த அளவிற்கு அதன்

முக்கியத்துவம் புரிய வேண்டும். It must be infinitely important to us என்பது இங்கு பொருந்தி வருகிறது. அந்த அளவிற்கு நான், வேலை , இடம், நண்பர்கள் , உறவுகள் என்று எல்லாவற்றையும் விட்டு வெளியே வந்தேன்.

நான் படிக்கும் முறையை consultants பின்பற்றினால், Information is power என்னும் வகையில் அவர்கள் அடைய முடியாத உயரம் இல்லை என்கிறார். இத்தகைய அறிவு பெற வரையறை என்பதே இல்லை. இதில் இரண்டாவது சட்டமும் அதாவது - It should be infinite search beyond logic reason and mind என்னும் இரண்டாவது சட்டமாகும் பொருந்துகிறது.

படிப்பதற்கொ-அது தொடர்பான மனநிலை மாற்றத்திற்கோ, ஆர்வத்திற்கோ முன்னேற்றத்திற்கோ , செம்மைகொ, புதியவை படைப்பதற்கோ இது போதும் என்றோ இது தான் முடிவு என்றோ, இது தேவையில்லாத வேலை , இதை விட உயர்ந்தது நல்லது என்று சொல்ல முடியாத அளவிற்கு இருக்க வேண்டும். It should be defendable for its effeciency on evolving என்னும் மூன்றாம் சட்டமும் பொருந்துகிறது.

நாம் அறிந்த பாகங்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும் அதாவது அறிவு, உணர்வு, மனம், ஆன்மா என்று அனைத்தின் பண்புகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும் இங்கு இருக்கிறது. அப்போது வாழ்வு தன்னை முழுமையாக தரம், இடம், காலம் ஆகியவற்றை சுருக்கி மற்றவர்கள் பல வருடம் செய்து பெற்றதை நான் மிக குறுகிய காலத்திலேயே பெற முடிந்தது. என் அறிவுடைமை, அறியாமை, பலம், பலவீனம், ஞானம், அஞ்ஞானம் உயர் சித்தம், தாழ்ந்த சித்தம் என்று அனைத்தை பற்றியும் விழிப்புணர்வு உள்ள இடம் அது என்பதால் அது என் தூய இருப்புக்கு உதாரணமாகச் சொல்லலாம்.

வெள்ளம் வந்த போது கர்மயோகி தந்த திருக்குறள் எப்படி என்னை மாற்றியது என்பதை சொல்லி இருக்கிறேன். அது ஞாபகத்தில் இருந்தால் இந்த தத்துவத்தை பொருத்திப் பார்த்தால் அதிலும் இவை அனைத்தும் பொருந்துவது தெரியும். வாழ்வின், பிரபஞ்சத்தின், பிரம்மத்தின் சட்டமே இது தான் .அன்னை அன்பர்கள் என்னும் நிலையில் செய்யும் போது நமக்கு அத்துடன் பல விஷயங்கள் பலன்கள் போனசாக கூடுதலாக கிடைக்கிறது. அது அன்னையின் அருள் சேருவதால் வருவது. நாம் ஒன்றை பகவான் சட்டம் புரிந்து செய்தால், அன்னை அருளுக்காக செய்தால், நம் செயலுக்கான பலன் மட்டுமல்ல நாம் இது வரை அதனால் இழந்ததையும் சேர்த்தே தருகிறது . அதை அன்னை பழைய வாழ்க்கையை புனிதப் படுத்திக் தருவதாகச் சொல்கிறார்.

It is Mother purifying our past life and consciousness – அதாவது அந்த செயலின் மூலம் நம் எதிர்காலம், வாழ்வின் மறுமொழிகள் பாதிக்கப்படாது என்பது அதன் பொருள். அன்னை கர்மத்தை துண்டித்ததற்கான அடையாளம் அது என்கிறார்.

உதாரணமாக 1982-இல் படிப்பை விட்ட நான் 2000-யில் தான் அது தவறு என்று உணர்ந்தேன். அதன்பின் படிப்பை முடிக்கும் போது, இழந்த இருபது வருட அறிவு, மரியாதை, வருமானம், அனைத்தையும் ஐந்து வருடத்தில் சேர்த்தே பெற்றேன்.

இது போல எங்கெல்லாம் இந்த நான்கு சட்டங்களை என்னால் ஒரு சூழலில், நிகழ்வில் என்னால் பொறுத்த முடிந்ததோ, அங்கெல்லாம் வாழ்வும், அன்னையும், கர்மயோகியும் தருவதை நான் முழுமையாகப் பெற்று இருக்கிறேன். நடந்ததை சொல்லும் போது இது ஒரு வெற்றிகரமான formula பிடிபட்டதாக தோன்றலாம். நான் வெற்றிகரமாக செய்வதாகத் தோன்றலாம்.. இந்த நான்கைந்து உதாரணங்கள் தவிர வேறேதும் என்னிடம் இல்லை என்பதிலிருந்தே தெரியும் - மற்ற விஷயங்கள் அனைத்தும் தோல்வி தான் என்று. என்றாலும் இலக்கில்லாமல் ஒரு காட்டில் திரிவதை விட, வழியைத் தேடுவதை விட, ஒரே நேர்கோட்டில் நடந்தால் ஏதாவது ஒரு எல்லையை அடைந்து வெளி வர மாட்டோமா என்னும் நப்பாசையின் வெளிப்பாடு அது. தத்துவங்களை பொருத்தி போரடிக்கலாமல், மேலும் ஒரு சில நிகழ்வுகளை மட்டும் சொல்கிறேன்.

2005 முதல் மையங்களில் ஒரு வதந்தி பேசப்பட்டு வந்தது. கர்மயோகி 1 லட்சம் மாதம் சம்பாதிப்பவரைப் பார்ப்பார் என்பதே அது. அதை கேட்டது முதல் என்னுள் எப்படியாவது அதை அடைந்து அவரைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அப்போது எனக்கு 6000 மத சம்பளம். 2005யிலிருந்து 2006 இறுதி வரை 6000 திலிருந்து , சுமார் 50,000 வந்தேனே தவிர அதைத் தாண்ட முடியவில்லை. அப்போது ஸ்ரீஹரிகோட்டாவில் Rocket launching pad க்கான tender ஒன்றை நான் வேலை செய்த கம்பெனி எடுத்திருந்தது. ஒரு challange-க்காக எடுத்து விட்டாரே தவிர புது technology என்பதால், துவக்கவே மிகுந்து சிரமப்பட வேண்டி இருந்தது. சென்னை branch என் பொறுப்பு என்பதால் technologi-ai அதன் சாரத்தை பற்றி முழுதும் படித்தேன். product data sheet-களை படித்து பலரிடம் கேட்டு புரிந்துக் கொண்டேன். உணர்வில் அதை நாட்டுப்பற்றோடு செய்ய வேண்டும், இதன் மூலம் launching -இல் நாடு தன்னிறைவு பெற வேண்டும் என்னும் project -ன் நோக்கத்தை என் நோக்கமாக எடுத்துக் கொண்டேன். ஆன்மாவின் பண்புகளை அப்போது

எனக்கு தெரிந்தவரை எடுத்துக் கொண்டேன். என்றாலும் பல பிரச்சனைகளை தினம் தினம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிரார்த்தனை செய்தாலும் அது தீரவேயில்லை. ஒரு சூழலில் கடலுக்கு அடியில் 90 அடி கீழே போய் concrete வேலை செய்ய வேண்டியிருந்தது. வேறு யாரும் செய்ய தயாராக இல்லை பொறுத்துப் பார்த்த நான், என்ன பெரிய கம்ப சூத்திரமா நானே செய்கிறேன் என்று சொன்னேன். என் அப்போதைய ஓனர், வேலை ஆனால் போதும் என்னும் நிலையில் profit -இல் share தருவதாக சொன்னார். மிகுந்த சிரமமான வேலை. தனி ஒருவனாக இறங்கி செய்தேன். வெற்றிகரமாக முடிந்தது. அந்த மாதத்தில் இருந்து அதாவது ஜனவரி 2007 இல் இருந்து மாதம் ஒரு லட்சத்திற்கும் மேல் எனக்கு அவர் தர வேண்டி இருந்தது. IT Form 16, Salary Certificate-டுடன் கர்மயோகியைப் பார்க்க அனுமதி கேட்ட போது தான் தெரிந்தது, அது யாரோ கிளப்பிய வதந்தி என்று. என்றாலும் பிளெஸ்ஸிங் பாக்கெட் கொடுத்து அனுப்பி கூடியவரையில் சொந்த கம்பெனி ஆரம்பிக்க வாழ்வு initative எடுக்கும் என்றார்.

அது போலவே, டிசம்பர் 27 2007இல் வாய்ப்பு அமைந்தது. அது அவரது பிறந்த நாள் என்று அப்போது எனக்குத் தெரியாது. இந்த நிகழ்வின் சுருக்கத்தில் நான் முன்பு சொன்ன தூய இருப்பின் சட்டங்களை பொருத்திப் பார்க்கலாம். இதில் குறிப்பாக சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. நான் உணர்வு, ஆன்மா, மனம் ஆகியவற்றில் ஒரு முழுமையை தர நினைத்த போது, உடலுக்கானதை மறந்த போது, வாழ்வு, சூழல் அழுத்தத்தைக் கொடுத்து அதை செய்ய வைத்து, அதாவது கடுமையான உடலுழைப்பை கொடுக்க வைத்து அதை பூர்த்தி செய்தது. அன்னை முரண்பாடுகள் மூலம் வாழ்வின் சட்டங்களை பூர்த்தி செய்வார் என்பதற்கு அது உதாரணம் என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம். நஷ்டமடைய வேண்டிய project எப்படி எனக்கு மட்டும் ஒரு லட்சம் தரும் அளவிற்கு மாறியது என்பதற்கு ஒரு கிளை நிகழ்வு இருக்கிறது. அது இந்த அத்தியாயத்திற்கு பொருத்தமாக இருக்காது என்பதால் வேறொரு சந்தர்ப்பத்தில் பொருந்தினால் சொல்கிறேன்.

சத்புருஷன் என்னும் இந்த அத்தியாயத்தில், நம் வாழ்வை சமுத்திரத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று பகவான் கூறுகிறார். அதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை அல்லது புரிந்து கொள்ள முடியவில்லை. கர்மயோகி அதையே அன்னையிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறார். அதுவும் நம்மால் முடியவில்லை. அதுவும் புரியவில்லை என்கிறோம். ஆனால் நாம் அறியாமல், அது பற்றிய ஞானம் இல்லாத பல இடங்களில் செய்து கொண்டு தான் இருக்கிறோம். நாம் நம் வாழ்வை சமுதாயத்திடம் ஒப்படைத்தால் தான், அதற்கு ஏற்றாற் போல் இருந்தால் தான், சமுதாயம்

தருவதை நாம் பெற முடியும். குடும்பத்துள் அது போல இருந்தால் தான், குடும்பம் தருவதை முழுவதுமாக பெற முடியும். காரணம் இவையெல்லாம் வாழ்விற்கான ஸ்தாபனம். Institutions of life. அதன் சக்தியை முமையாக பெற்றால் தான், நாம் வாழ்விலும், சமுதாயத்திலும் முன்னேற முடியும். அந்த வகையில் பார்த்தால், அன்னை ஒரு ஸ்தாபனம் - அதன் சக்தி தருவதை முழுமையாகப் பெற வேண்டுமென்றால், ஞானமில்லாமல், பழக்கமாக சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் செய்வதை ஞானத்தோடு, விழிப்புணர்வோடு,அன்னை முறைகளை தெரிந்து செய்ய வேண்டும்.

சத் புருஷன் பரிணாமம் என்னும் வேலையில் ஈடுபட்டு இருக்கிறான். அவன் ஞானத்தை தரத் தயாராக இருக்கிறான் என்று பிரித்துப் பார்த்தாலும் சரி, நமக்கு பிரம்மம் நாமே, நாமே பிரம்மம், என்று நினைத்தாலும் சரி, அதன் பொருள் நம் வாழ்வை நாமே படைக்கும் ஆற்றல் நமக்கு உள்ளது என்பதே. நமக்கு அக்கறை உள்ள அளவு நாம் சாதிக்கிறோம். நாம் பிரம்மத்தின் சட்டங்களை வெளிப்படுத்தும் அளவிற்கு சாதிக்கிறோம். சிந்தனையால் பகுத்தறிந்து, தர்க்கரீதியாக சரி என்று நினைத்ததை செயல்படுத்துவது நம் உறுதி. செயல்படுத்தும் அளவுக்கு அது வடிவம், தரம், அளவு, காலம் சூழலைப் பெறுகிறது. அப்போது பலனை நாடும் லட்சியத்தை கடந்த - பண்பை நாடும் ஆர்வம் - நம்மை சத்புருஷனாக்கும். Not read

அன்னையும் கர்மயோகியும் இது பற்றி எளிமையாக பல இடங்களில் கூறியிருக்கிறார்கள். நான் எப்படி செய்ய முடியும் என்பது இங்கு கேள்வி இல்லை. அப்படி நினைப்பது தவறு. அன்னைக்காக செய்கிறேன் என்று நினைத்து நம் நம்பிக்கையை சமர்ப்பணம் மட்டும் செய்தால் போதும். மீதியை அன்னை ஏற்று நடத்துவார் என்கிறார். நாம் அதை படிக்கிறோம்,பொருட்படுத்துவதில்லை. பொருட்படுத்த, செயல்படுத்த, முதலில் இந்த சட்டங்கள் மேல் நம்பிக்கை வர வேண்டும். சிறியதில் வெற்றி கண்டால் பெரியது பலிக்கும். சிறியது, பெரியது, தரம், அளவு, இடம், காலம் என்பதெல்லாம் அன்னையிடம் இல்லை. அந்த சக்தி ஜீவனுள்ளது -. ஜீவனற்றது அகந்தை. அதனால் அகந்தை x அடக்கம், ஆர்வம் x ஆசை, பரிணாமம் x சிருஷ்டி என்ற மனதின் பிரிவினைக்கான அடிப்படிகளை மட்டுமே பார்த்து செயல்பட்டால். இந்த வித்தியாசத்தை உணர்ந்து கடைபிடித்தால், படைப்பாற்றல் கொண்ட பிரம்மம் நாமே என்பது புரியும். Not read

மீதியை அடுத்த கூடலில் பார்க்கலாம்.